complaint that the fertilisers do not reach the small farmers and that they do not get even half a bag or two or three measures of fertilisers. So, will the Government find out what exactly is the difficulty in the distribution system and see that all the loopholes in the distribution system are plugged so that there would not be any bad name for the distribution system itself?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பதுதான் எனக்குப் புதுமையாக இருக்கிறது. உரம் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற கஷ்டம் தமிழகத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இல்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் அதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாவட்ட கலெக்டர் நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார். தற்போது உரத் தட்டுப்பாடு என்ற நிலை கிடையாது.

திரு. முனு. ஆதி: செங்கற்பட்டு மாவட்டத்தில் உர விநியோகம் பஞ்சாயத்து யூனியன் மூலம் நடைபெறுவதில் எந்தவிதமான புகாரும் இல்லாமல் நல்லபடியாக உரம் கிடைக்கும் நிலை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறுவது ஒருவேளை நமக்கு 5,000 மூட்டைகள் ஒதுக்குகிறார்கள் என்றால் அதைப் பகிர்ந்து கொடுக்கும்போது அது போதாது என்ற கருத்தில் இருக்கலாம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கொடுக்கப்படும் போது நல்ல முறையில் கொடுக்கப்படுவதால் மற்ற மாவட்டங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விநியோகிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இதைப் பற்றி முன் கேள்விக்கே பதில் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடைபெறுகிற விநியோக முறை எங்கு சரியில்லையோ அங்கெல்லாம் அதைப் பற்றி மாவட்ட கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தப் பகுதியில் மட்டும் உர விநியோகப் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனுக்கு அளிக்க அரசு அனுமதியளிக்கும்.

Farm Jails

* 10 *Q.*—THIRU T. MARTIN:
THIRU V. SWAMINATHAN:
THIRU P. MALAICHAMY:
THIRU K. VINAYAKAM:
THIRU N. S. V. CHITHAN:
} Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to establish farm jails in this State: and

(*b*) if so, the details thereof?

1968 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இத்தகைய ஒரு செயற் குறிப்பு அரசினர் பரிசீலனையில் உள்ளது.

(இ) விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether the State Government have sent any official to other States where the farm jails are in existence to study about it and submit a report to the Government before launching upon this scheme?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த இலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகள் வடக்கே உள்ள மாநிலங்களுக்குச் சென்று இது பற்றி ஆராய்ந்து வந்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, what are the new features of this kind of farm jails and what are the advantages derived by the prisoners in these jails and when it would be put into operation?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலை சுவர்களுக்கு இடையிலே இருப்பது மட்டுமல்லாமல் விவசாயப் பண்ணையில் இருப்பது போல் வீடுகள் அமைத்து அந்த வீடுகளில் வாழ்ந்து கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற அடிப் படையில் இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இந்தத் திட்டத்தை ஒவ்வொரு சிறைச்சாலையிலும் அமலுக்குக் கொண்டு வர வேண்டும், அதன் காரணமாகச் சிறைச்சாலைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அதன்மூலமே பெற்றுக் கொள்ள வேண்டு மென்ற முறையில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவன் : தற்போதுள்ள சிறைகள் மனிதர்கள் வாழ கொஞ்சம் கூட லாயக்கற்ற நிலையில் உள்ளன. அப்படிப்பட்ட சிறைகளில் ஜன்ம தண்டனைக் கைதிகள் கணிசமான அளவில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட ஜன்ம தண்டனைக் கைதிகள் பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்து விட்டால் அப்படிப் பட்டவர்களைப் பண்ணைக் கைதிகளாக மாற்றும் வகையில் துரிதமாக இந்தத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் பண்ணைச் சிறைச்சாலைகளில் ரொம்ப சவுகரியம் செய்து கொடுத்து கைதிகளை அங்கு கொண்டு போய் வைத்தால் வெளியில் இருந்து அவதிப்பட்டுக் கொண்டிருக் கிற பலர் ஏதோ சிறு குற்றங்களைச் செய்து விட்டு பண்ணைச் சிறைக்குச் சென்று விடலாம் என்ற முறையில் ஜனங்களுக்கு எண்ணம் ஏற்பட்டு அதன் காரணமாக குற்றவாளிகள் அதிகமான அளவுக்குப் பெருகிவிடுவார்கள் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசித்ததா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது சென்ற நூற்றாண்டின் கருத்து. இந்த நூற்றாண்டில் சிறைச்சாலையிலும் அவர்களுக்கு எந்தவிதமான தீமையும் ஏற்படுத்தாமல், அவர்களுக்கு வெளியுலகத்தில் தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற அதே நேரத்திலே உற்பத்திப் பெருக்கத்தில் அவர்கள் ஈடுபட வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் பண்ணைச் சிறைச்சாலைகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சில மாநிலங்களில் இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

3. அறிவிப்புகள்

(i) பேரவைத் தலைவர் ராஜிநாமா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர்
மு.ப. 11-00 அறிவிப்பு. அரசியலமைப்பின் 179-வது விதியின் (b) பகுதியின் கீழ், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் பதவியை திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள், 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12-ம் நாள் பிற்பகல் முதல் ராஜிநாமா செய்துள்ளார் என்பதை நான் இப்பேரவைக்குத் தெரிவிக்கின்றேன்.

அரசியலமைப்பின் 180-வது விதியின் (1) வது பகுதியின்கீழ், பேரவைத் தலைவர் பதவி காலியாக இருக்கையில், அப்பதவி குறித்த பணிகள் பேரவைத் துணைத் தலைவரால் மேற்கொள்ளப்படும்.

தமிழக சட்டப் பேரவையின் கண்ணியத்தையும் பெருமையையும் உயர்த்துகின்ற வகையில், தமக்கு ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் தமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இப்போது தாங்கள் ஒரு அறிவிப்பு கொடுத்ததன் மீது . . .

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார். தங்களுடைய அறிவிப்பின் மீது எந்தவிதமான வாதங்களோ அல்லது அது குறித்த விவாதங்களோ இருக்கக் கூடாது என்பது சட்டமன்றத்தின் விதி. அதை நான் தங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்கள் அறிவிப்பின் மீது விவாதத்தைத் தொடங்குகிற காரணத்தினால் அது ஒழுங்கு முறையா என்று அறிய விரும்புகிறேன்.